RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# குறிஞ்சித்தேன் நாவலின் வழி மக்களின் வாழ்வில் மழை

அ. உபகாரச்செல்வி [அ, *]

[அ] முதுகலை தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா

# Rain in People’s Lives through the Novel Kurinjithen

A. Ubakaraselvi [a, *]

[a] Department of Tamil, Chellammal Women’s College, Guindy, Chennai – 32, Tamil Nadu, India

* Corresponding Author: ubakaraselvi1987@gamil.com

Received: 03-12-2025
Revised: 25-02-2026
Accepted: 08-03-2026
Published: 15-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan is considered one of the most remarkable women writers. The data mentioned in her works is very carefully researched and researched. In the novel kurinjithen, rain is intertwined with the life of the boatmen. Along with the natural beauty fo the Nilgiris,the natural beauty of the people, the rain plays an important role in conveying the life, hopes and struggles of the people. The role of rain less than required, agriculture. Even if it rains less that required, agriculture will be affected. If the required amount of rain falls at the right time, the benefits in agriculture will be abundant. This rain plays a role in the joys and sorrows of the boatmen in the novel kurinijithen.

**Keywords:** Rajam Krishnan, Kurinjithen, Agriculture, Rain.

## முன்னுரை

இயற்கை மனிதர்களின் வாழ்வில் முக்கியமான ஒன்றாகும். இயற்கை இன்றி மனிதவாழ்வு இல்லை மனிதர்கள் இயற்கையின் வளங்களைச் சார்ந்தே வாழ்கின்றனர். அமைதியான இயற்கை மனித வாழ்வை மேம்படுத்துகிறது. நாம் சுவாசிக்கும் காற்று, நீர், உணவு அனைத்தும் இயற்கையிலிருந்து பெறப்படுகிறது. அவ்வகையில் மழை மக்களின் வாழ்வில் பல்வேறு வகையில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. நன்மை, தீமை என இருவேறு வடிவங்களில் மழை மக்களின் வாழ்வில் இடம் பெறுகிறது. திருவள்ளுவர் நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக,

“நீரீ இன் றமையாது உலகுஎனின் யார்யார்க்கும்

வான்இன் றமையா தொழுக்கு” (குறள் -20) (kural-20)

என்று குறிப்பிடுகிறார். மழையானது உயிர்களுக்கு எவ்வகையில் இன்றியமையாததாக உள்ளது. என்பது புலப்படுகிறது. இராஜம் கிருஷ்ணன் அவர்கள் எழுதிய நாவலாகிய குறிஞ்சித்தேனில் மழையானது, படகர் இனமக்களின் வாழ்வோடு எவ்வாறு தொடர்புடையதாக அமைத்துக் கூறியுள்ளார் என்பதைக் கூறும் விதமே இக்கட்டுரையின் நோக்கமாகும். மழை இல்லை என்றால் எந்த ஒரு செயலும் இல்லை என்பதை

“மாரி அல்லது காரியம் இல்லை”

(நீதி நூல்கள் – கொன்றைவேந்தன் - 71) neethi noolgal konraivendhan-71)

என்பதை நீதி நூல்களின் வழி அறியப்படுகிறது.

## விவசாயத்தில் மழையின் பங்கு

விவசாயத்தில் மழையின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாக கருதப்படுகிறது. மழையில்லை என்றால் விவசாயம் என்ற சொல்லுக்கே இடம் இல்லை. தக்க நேரத்தில் மழைபெய்வதும் சிறப்பான ஒன்றாகும். அவ்வகையில் குறிஞ்சித்தேன் நாவலில் ரங்கன் என்ற கதாப்பாத்திரம் உருளைக்கிழங்கு பயிரிட்ட சில நாட்களிலேயே மழை பெய்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறான். இதனை, "கிழங்கு விதைத்து, பதினைந்து நாட்களுக்குள் ஒரு மழையும் பெய்துவிட்டது." (குறிஞ்சித்தேன் நாவல், பக்கம்-113) (Kurunchi then naval, pg.113) என்று கூறப்படுகிறது. உரிய காலத்தில் விவசாயத்திற்கு மழைபெய்ததால் நன்மையின் காரணமாக மகிழ்ச்சி என்னும் உணர்வானது வெளிப்படுகிறது. இக்கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில் திருவள்ளுவர்,

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்

துண்நின்று உடற்றும் பசி" (குறள் -13) (kural - 13)

தக்க நேரத்தில் பெய்த மழையால் ஏற்படும் நன்மைகளும், அவ்வாறு பெய்யவில்லை என்றால் ஏற்படும் தீமைகளுமாகிய மழையின் பங்கு மக்களின் வாழ்வில் இன்றிமையாத ஒன்றாக இருப்பது புலப்படுகிறது.

## அதிக மழையால் ஏற்படும் விளைவு

அளவுக்கு அதிகமாக மழைபெய்வதால் மக்களின் வாழ்வில் பல்வேறு வகையான இன்னல்களும் நேரிடுகிறது. அதிக மழையால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படுகிறது. மழையின் அளவு குறைந்தாலும் பாதிப்பு, இயல்பைவிட அதிகமாக பெய்தாலும் பாதிப்பு பல்வேறு வகையில் ஏற்படும். அதிக மழையால் விவசாயம் பாதிக்கப்படுவதை கூறும் விதமாக "ஆனி பத்துத் தேதியில் பிடித்த மழை, புரட்டாசி பிறந்தாயிற்று; விடவில்லை.....இந்தப் பிரளய மழையில் அவளுடைய இளம் பயிர்கள் எப்படி இருக்கின்றனவோ!" (குறிஞ்சித்தேன் நாவல், பக்கம்-183) (Kurunchi then naval, pg.183) என்று இராஜம் கிருஷ்ணன் குறிஞ்சித்தேன் நாவலில் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்.

அதிக மழையால் விவசாயம் பாதிக்கப்படும் என்பதும், இதனால் மக்களுக்கு மன உளைச்சலாகிய துன்பம் ஏற்படும் என்பதும் புலப்படுகிறது. இக்கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில் மு.வா. அவர்கள் எழுதிய கரித்துண்டு நாவலில் அதிக மழையால் ஏற்படும் இழப்பானது குறிப்பிடப்படுகிறது.

"அன்று இரவு பன்னிரண்டு மணிக்குமேல் ஓ என்று பெரிய இரைச்சல் கேட்டு விழித்தெழுந்தேன். மழை சோ என்று விடாமல் பெய்து கொண்டிருந்தது. வானமெல்லாம் இருண்டு திக்குத் தெரியாமல் இருந்தது? அய்யா, எங்கள் குடிசை எல்லாம் வெள்ளம் வந்துவிட்டது. என்று கூக்குரலிட்டார்கள்" (கரித்துண்டு, டாக்டர்.மு.வ. பக்கம்-112) (karithundu, Dr.mu.va. pg.112) என்று கூறப்படுகிறது. அதிக மழையால் வீடுகள் சேதமடைவதும், ஏழை மக்கள் குழந்தைகளோடு, மற்றவர்களிடம் உதவி கேட்பதுமான துன்ப நிலைக்கு மழையால் தள்ளப்படுகிறார்கள். மக்களின் வாழ்வில் மழையானது இன்பத்தில் மட்டுமன்றி துன்பத்திலும் கலந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. மழையை இரக்கம் இல்லாத மழை என குறிஞ்சித்தேன் நாவலில் சுட்டிக்காட்டப்படுகிறது.

"அருமை மக்களைப்போல் அவள் பேணிய பயிர்கள் கருணையற்ற மழையில் எப்படிக் கலங்கிச் சாய்ந்திருக்குமோ?' (குறிஞ்சித்தேன் நாவல்.பக்கம்.184) (Kurunchi then navol, pg.184)

என்னும் கூற்றானது அமைகிறது. மழை இல்லையென்றால் வாழ்வே இல்லை. ஆனால் இங்கு அதிக மழையால் மழைக்கு பழிச்சொல்லானது கிடைக்கப் பெறுகிறது. அதிக மழையால் வீடுகள் சேதமடைவது பற்றி குறிஞ்சி மலர் நாவலின் மூலம் அறியப்படுகிறது.

"அந்த ஆண்டில் கார்த்திகை மாதம் மதுரையில் பயங்கரமான மழை. பஸ் நிலையத்துக்குத் தென்புறமுள்ள பள்ளத்தில் இருந்த அரிஜனங்களின் குடிசைகள் எல்லாம் இந்த மழையில் விழுந்துவிட்டன." (குறிஞ்சி மலர் பக்கம்-168) (Kurunchi malar-168)

இச்செய்தியின் வாயிலாக விளக்கப்படுகிறது. குறிஞ்சித்தேன் நாவலில் படுகர் இன மக்களின் துன்பநிலைக்கு, மழையும் இசைந்துவிட்டது.

"மழை முழுவதும் நின்று, இருள் கும்மென்று சூழ்ந்து வர, ஈரமண்ணின் வாடையும் குளிர் காற்றுமாக, அந்தத்துயரச் சூழ்நிலைக்கு இசைந்துவிட்டது." (குறிஞ்சிதேன் நாவல், பக்கம்.193) (Kurunchi then naval, pg.193)

என்பார் ராஜம் கிருஷ்ணன். மழையால் வாழ்வும் உண்டு. அழிவும் உண்டு. இதனை விளக்கும் வகையில், திருவள்ளுவரின்

"கெடுப்பதூம் கெட்டார்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூம் எல்லாம் மழை" (குறள் – 15) (kural - 15)

என்னும் குறளானது மழையின் வலிமையும், இன்றியாமையும் உணர்த்தப்படுகிறது. மழையை இலக்கியங்களில் உவமையாகவும் கையாளப்படுகிறது.

## மழை உவமையாக இடம் பெறுதல்

குறிஞ்சித்தேன் நாவலில் படுகர் இன மக்களின் துன்பநிலைக்கு மழை உவமையாக கையாளப்படுகிறது. என்பதை, "ஜோகி உள்ளே சென்று பார்த்தான், மழையில் அடிபட்டுச் சோர்ந்த தாழ்வாரை மலர்போல் அவள் கிடந்தாள். (குறிஞ்சித்தேன் நாவல், பக்கம்.241) (kurnchi then naval, pg-241)

என்று குறிப்பிடுகிறார். அதிகமான மழைப்பொழிவால் தான் மலரானது சோர்ந்து காணப்படுகிறது என்பதும், அந்நிகழ்வினை மக்களின் துன்ப நிலைக்கு உவமையாக கையாளப்படுவதையும் அறிந்துகொள்ள முடிகிறது. நாலடியாரிலும் மக்களுக்கு நற்கருத்துக்களை எடுத்துக்கூறும் இடத்தில் மழை உவமையாக இடம் பெறுகிறது. இதனை,

"உறற்பால் நீக்கம் உறுவார்க்கும் ஆகா

பெறற்பால் அனையவும் அன்னவாம் மாரி

வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்

சிறப்பின் தணிப்பாரும் இல்,"

(நாலடியார், பாடல்-104) (Naladiyar, paadal-104)

என்னும் நாலடியார் பாடல் சுட்டிக்காட்டுகிறது. ஊழ்வினையால் வந்த துன்பத்தை எவராலும் தடுக்கமுடியாது. அது எவைபோல என்றால் மழை பெய்யாத போது, மழையை பெய் என்று கூறி பெய்ய வைக்கவும் முடியாது. மிகுதியான மழைப் பெய்தால் குறைவாக பெய் என்று குறைவாக பெய்ய வைக்கவும் முடியாது, என மழையின் வலிமையானது இங்கு உணர்த்தப்படுகிறது. அதிகமான மழைபெய்யும் பொழுது, அதன் ஒலியானது, மிகுந்த பேரிரைச்சலுடன் காணப்படும் அவ்வகையான பேரிரைச்சலை ஒலிக்கு உவமையாகவும் கூறப்படுகிறது. இராஜம் கிருஷ்ணன் அவர்கள், இதனைக் கூறும் விதமாக, "எட்டு மணி, ஷிப்ட் முடிந்துவிட்டதன் அடையாளமாகச் சடபட சடபட யந்திரச் சத்தம் மழை பெய்து ஓய்ந்தாற்போல நின்றுவிட்டது." (குறிஞ்சித்தேன் நாவல், பக்கம்.375) (Kurunchi then naval, pg.375) என்று குறிப்பிட்டுள்ளார். மக்களின் வாழ்வோடு தொடர்புடைய செயல்களுக்கு மழையானது உவமையாகவும் இடம்பெறுகிறது. மழையின் ஓசையினை, "மழை சோவென்ற ஓசையுடன் வெள்ளிக் கம்பிகளாக வானிலிருந்து இழைந்து விழுந்து கீழே ஓடிக்கொண்டிருந்தது." [14] (குறிஞ்சித்தேன் நாவல், பக்கம்.182) (kurunchi then naval, pg.182) என இராஜம் கிருஷ்ணன் எடுத்துரைத்துள்ளார். மழைபெய்யும் பொழுது எழும் ஒலியானது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. அதிகமான மழைக்குரிய அறிகுறிகளாகவும் திகழ்வதை தெரிந்துகொள்ள முடிகின்றது. இக்கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில்,

"வயங்குவெயில் ஞெமியப் பாஅய் மின்னுவ சிப

மயங்குதுளி பொழிந்த பானாட் கங்குல்."

(அகநானூறு நித்திலக்கோவை, பாடல்.322 வரி 1-2) (Akananooru nithilakkoovai, padal.322, vari 1-2)

என்னும் அகநாநூற்றுப் பாடலின் வாயிலாக மழையானது இடி, மின்னல்களுடன் பொழியும் தன்மையினை உடையது என்பது புலப்படுகிறது. மின்னல் வருவது பின்னால் அதிகமான மழை பொழிவிற்கான அறிகுறியாகும். இவற்றை நீதி நூல்களில் "மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை" (நீதி நூல்கள்-கொன்றை வேந்தன்72) (neethi noolgal-konraivendhan - 72) என்று கூறப்படுகிறது.

அதிகமான மழைப்பொழிவினை விளக்கும் வகையில் ராஜம்கிருஷ்ணன் அவர்கள்

"மழை நாளில் அவள் திறந்த வெளியில் நின்று வேலை செய்வதற்கில்லை. மழைதான் ஆகட்டும். ஒரு நாளா இரண்டு நாளா? வானந்தான் பொத்துக் கொண்டதோ?" (குறிஞ்சித்தேன் நாவல், ப.183) (Kurunchi then naval, pg.183)

என்று குறிப்பிடுகிறார். அதிக மழையின் ஆதிக்கமானது இங்கு வெளிப்படுகிறது. பொத்துக் கொண்டதோ என்று கூறும் பொழுது மழையின் வன்மையானது புலப்படுகிறது. ஐங்குறு நூற்றில் அதிகமான மழையினை,

"மாரி கடிகொளக், காவலர் கடுக"

(ஐங்குறூறு-மருதம் பாடல்.29) (Inkurunooru-marudham paadal-29)

என்று கூறப்படுகிறது. கடி-அதிகமான மழைப் பொழிவிற்குரிய சொல்லாக அமைகிறது.

## முடிவுரை

மழை மக்களின் வாழ்வில் முக்கிய பங்குவகிக்கிறது. மழையால் மக்களின் வாழ்வு பெருகவும் முடியும், மழையால் மக்களினம் வாழ்வு குறுகவும் முடியும் எனபதும், கார்த்திகை மாதங்களில் மழையானது அதிகமாக இருக்கும் என்பதும் அதிகமான மழையின் ஓசை மிகுந்த பேரிரைச்சலுடன் காணப்படுவதும், மழையினை யாரும் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள முடியாது என்பதும், இலக்கியங்களில் மழை குறிப்பிடத்தக்க ஒன்றாக திகழ்வதையும், இடி மின்னல்கள் அதிகமான மழைப்பொழிற்விற்கான அறிகுறிகள் என்பதையும் அறிந்துக் கொள்ள முடிகின்றது. இந்நிகழ்வுகள் ஒவ்வொன்றும் மக்களின் வாழ்வோடு கலந்திருப்பதை ராஜம் கிருஷ்ணன் அவர்களின் படைப்பாகிய குறிஞ்சித்தேன் நாவலின் வழியாக அறிந்துக்கொள்ள முடிகின்றது.

## References

ராஜம் கிருஷ்ணன், (2018) குறிஞ்சித் தேன், முதற்பதிப்பு, கெ.சிவராமலிங்கம் பதிப்பகம், சென்னை.

நா. பாலுசாமி, திருக்குறள் சிறப்புரை, முதற்பதிப்பு, பாண்டியன் புக் டிப்போ, மதுரை.

துரை தண்டபாணி, (2009) நீதிநூல்கள், கொன்றைவேந்தன், உமா பதிப்பகம், சென்னை.

மு. வரதராசன், (1953), கரித்துண்டு, தாயகம் வெளியீடு, பாரிநிலையம், சென்னை.

நா. பார்த்தசாரதி, (2007), குறிஞ்சி மலர், சீதை பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

கு. மதுரை முதலியார், (1988) நாலடியார், முதற்பதிப்பு, முல்லை நிலையம் பதிப்பகம், சென்னை.

புலியூர்க் கேசிகன் (2017) அகநானூறு மூலமும் உரையும் நித்திலக் கோவை, அரண் பப்ளிகேஷன், தஞ்சாவூர்.

புலியூர்க் கேசிகன், (2008) ஐங்குறுநூறு, மருதமும், நெய்தலும், முதற்பதிப்பு, பாரிநிலையம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License